செ.வெ. எண் : 121 நாள் : 09.09.2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 9 .9.2011

கிருஷ்ணகிரி மாவட்ட ஆயுதப் படை பிரிவில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சி.குமரேசன் என்பவர் 3.9.2011 அன்று இரவு என்.எச்.7 தேசிய நெடுஞ்சாலையில், கிருஷ்ணகிரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பால் பண்ணை சந்திப்பில் ரோந்துப் பணியிலிருந்த போது, வாகனம் மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

திரு. சி.குமரேசன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையாற்றிக் கொண்டிருந்த போது காலமான காவலர் திரு. சி.குமரேசன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9